நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வேளாண் துறையில் முதலீட்டை அதிகரிக்க வேண்டும்**

First Published : 12 Jan 2012 03:01:26 AM IST



பட்ஜெட் தொடர்பாக விவசாய சங்கப் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் புது தில்லியில் புதன்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்ற மத்திய நிதியமைச்சர் பிரணாப் முக

புது தில்லி, ஜன. 11: வேளாண்துறையில் கூடுதல் முதலீடுகள் செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துறை சார்பில் மத்திய நிதியமைச்சரிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

மத்திய பட்ஜெட்டை முன்னிட்டு பல்வேறு துறையினரின் ஆலோசனைகளைப் பெறும் விதத்தில் துறைப் பிரதிநிதிகளை நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி சந்திக்க இருக்கிறார். புதன்கிழமை வேளாண் துறை சார்பில் ஆலோசனைகளை அளிக்க குழு ஒன்று அவரை சந்தித்தது.

இந்த சந்திப்பின்போது இணை அமைச்சர்கள் நமோ நாராயண் மீனாவும் எஸ்.எஸ்.பழனி மாணிக்கமும் உடனிருந்தனர்.

வேளாண் துறையில் பெரும் தொகை முதலீடு செய்யப்பட வேண்டும் என்று இந்த சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. 11-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாயத் துறையின் வளர்ச்சி விகிதம் 4 சதவீதமாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் தற்போதுள்ள முதலீடுகளின் அடிப்படையில் விவசாயத் துறை வளர்ச்சி 3 சதவீதம் முதல் 3.5 சதவீதமாகத்தான் இருக்கும்.

வளர்ச்சியை அதிகரிக்க இத்துறையில் பெரும் தொகை முதலீடு செய்யப்பட வேண்டும். மத்திய அரசு வேளாண் துறைக்கு அளித்து வரும் மானியங்களை சீராக்குவதன் மூலம் இத்துறையில் அதிக அளவில் முதலீடுகளைக் கொண்டு வர இயலும். இப்போது இத்துறையில் உள்ள முதலீடு ஆண்டுக்கு ரூ.30 ஆயிரம் கோடி. அதே சமயம், உரம், மின்சாரம், விவசாயக் கடன் என்ற வகையில் ரூ.2 லட்சம் கோடி மானியமாக வழங்கப்படுகிறது.

இந்த நிலை மாற வேண்டும். முதலீடு 80 சதவீதமாகவும் மானியம் 20 சதவீதமாகவும் இருந்தால்தான் இந்தத் துறை எதிர்பார்த்த அளவு வளர்ச்சி பெறும். இதனை ஊக்குவிக்கும் வகையில் மத்திய பட்ஜெட் அமைய வேண்டும் என்று சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

விவசாயப் பொருள்களின் விநியோகத்தை மேம்படுத்தும் விதமாக கிடங்குகள் உருவாக்குவது, பால், மீன்துறைகளில் ஈடுபட்டுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு வரி விலக்கு அளிப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை அவர்கள் நிதியமைச்சகத்திடம் வைத்துள்ளனர்.

**உணவுப் பாதுகாப்புச் சட்டம்: பிப்ரவரியில் மாநில அமைச்சர்கள் கூட்டம்**

First Published : 12 Jan 2012 12:16:54 AM IST

புது தில்லி, ஜன. 11: உணவுப் பாதுகாப்புச் சட்ட மசோதா குறித்து விவாதிப்பதற்காக மாநில உணவுத் துறை அமைச்சர்கள் கூட்டத்தை பிப்ரவரியில் கூட்ட மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

கடந்த நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த மசோதா இப்போது நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிசீலனையில் உள்ளது.

இதன் அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பின் மசோதாவை வரும் பட்ஜெட் கூட்டத் தொடரில் நிறைவேற்றி ஜூலை 1 முதல் அமல்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. நாட்டின் 63.5 சதவீத மக்கள் தொகைக்கு பொது விநியோகத் திட்டத்தின்படி, குறைந்த விலையில் உணவு தானியங்கள் கிடைப்பதை இந்த மசோதா சட்டப்பூர்வ உரிமையாக்குகிறது.

இந்த மசோதாவை நிறைவேற்றும்போது, உணவு தானியங்களின் தேவை 55 மில்லியன் டன்னில் இருந்து 61 மில்லியன் டன்னாக அதிகரிக்கும்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணித் தலைவர் சோனியா காந்தியின் வழிகாட்டுதலின்படி தயாரிக்கப்பட்டுள்ள இந்த நலத் திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு மத்திய உணவுத் துறை அமைச்சகத்துக்கு உள்ளது. அதனால் கோதுமை, அரிசி ஆகியவற்றின் கொள்முதலை அதிகரித்து கையிருப்பை அதிகப்படுத்துவதில் கவனம் செலுத்த உணவுத் துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

இதையடுத்து, உணவு தானியங்களின் கையிருப்பு, தேவையைவிட மிகக் குறைவாக இருக்கும் மேற்கு வங்கம், பிகார், ஜம்மு-காஷ்மீர், அசாம், ஜார்க்கண்ட் ஆகிய ஐந்து மாநில அரசுகளுக்கு

இது தொடர்பாக மத்திய நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் கே.வி.தாமஸ் கடிதம் எழுதியுள்ளார்.

"உணவு தானியங்கள் உற்பத்தியையும், அவற்றின் கொள்முதலையும் அதிகரிக்க செயல்திட்டத்தை வகுக்குமாறு' அந்த மாநில அரசுகளை அவர் கேட்டுக்கொண்டுள்ளார். அசாம், பிகார், ஜார்க்கண்ட், ஜம்மு-காஷ்மீர் மாநிலங்களில் உணவு தானியங்களை மாநில அரசுகள் கொள்முதல் செய்து, விநியோகித்தாலும் அதற்கான செலவை மத்திய அரசு ஏற்றுக்கொள்வது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், உணவுப் பாதுகாப்புச் சட்ட மசோதா குறித்து தமிழ்நாடு, பிகார், உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு உள்ள கருத்து வேறுபாடுகளை களைவதற்காக பிப்ரவரி மத்தியில் அனைத்து மாநில உணவுத் துறை அமைச்சர்கள் கூட்டத்தை கூட்டவும் மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

**பூச்சி நோய் கண்காணிப்பு, கட்டுப்பாட்டு முறைகள்**

First Published : 12 Jan 2012 12:00:00 AM IST



கோவை: ஜனவரி மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகளை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது.

நெல்: நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத் துளைப்பான் தாக்குதல் தருமபுரி, காஞ்சிபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருவாரூர், திருநெல்வேலி, திருவண்ணாமலை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் காணப்படுகின்றன.

இவற்றைக் கட்டுப்படுத்த விளக்குப் பொறிகளை அமைத்து பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். பூச்சிகளின் பாதிப்பு அதிகமாக இருக்கும் நிலையில் வேப்பங்கொட்டை சாறு 5 சதக் கரைசலைத் தயாரித்து பயிர்களில் தெளிக்கவும் அல்லது பாஸ்போமிடான் 40 எஸ்.எல். 600 மி.லி./ ஹெக்டர் (அ) புரோபனோபாஸ் 50 இ.சி. 1,000 மி.லி./ ஹெக்டர் மருந்தினை தெளித்துக் கட்டுப்படுத்தலாம். நெல்லில் இளைப்புள்ளி நோய் தாக்குதல் சிவகங்கை மாவட்டத்தில் பரவலாக காணப்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த மேங்கோசெப் 2.0 கிராம்/ லிட்டர் (அ) எடிபென்பாஸ் 1 மி.லி./ லிட்டர் என்ற முறையில் கலந்து 2 அல்லது 3 முறை 10-15 நாள்கள் இடைவெளியில் நோய் தாக்குதலுக்கு ஏற்பட தெளிக்குமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

பாக்டீரியா இலைக் கருகல் நோய் தாக்குதல் தருமபுரி, காஞ்சிபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களில் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் மற்றும் டெட்ராசைக்களின் 300 கிராம் மற்றும் காப்பர் ஆக்ஸிகுளோரைடு 1.25 கிராம்/ ஹெக்டர் என்ற அளவில்

தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.நெல் குலை நோய்க்கான முன்னறிவிப்பு: தட்பவெப்ப நிலை சாதகமாக இருப்பதால் கடலோர மாவட்டங்களில் நெற்பயிரை குலை நோய் தாக்குவதற்கு வாய்ப்புள்ளது. அதனைக் கட்டுப்படுத்த 0.1 சதவீதம் (1 மி.லி./ 1 லிட்டர் தண்ணீரில்) டிரைசைகுளோசோல் என்ற மருந்தினை 10 நாள்கள் இடைவெளியில் தெளிக்கவும்.

பருத்தி: தேனி மாவட்டத்தில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் தென்படுகின்றன. மஞ்சள்

நிற ஒட்டும் பொறியை உபயோகித்து இவற்றின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும் (அ) இமிடோகுளோபிரிட் 200 எஸ்.எல். என்ற மருந்தினை 100 மி.லி./ ஹெக்டர் (அ) மெத்தில் டெமட்டான் 25 இ.சி. 500 மி.லி./ ஹெக்டர் என்ற அளவில் தெளித்துக் கட்டுப்படுத்தலாம். காய்ப்புழுக்களின் நடமாட்டம் குறைவாகவே தென்படுகிறது. இவற்றை இனக் கவர்ச்சிப் பொறிகளை வைத்துக் கட்டுப்படுத்தவும்.

கரும்பு: சிவகங்கை தஞ்சாவூர், நாமக்கல் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் தண்டுத்துளைப்பான் தாக்குதல் தென்படுகின்றது. இதைக் கட்டுப்படுத்த

டிரைக்கோகிராம்மா முட்டை ஒட்டுண்ணிகளை ஒரு ஏக்கருக்கு 6 சி.சி. என்ற அளவில் வெளியிடவும். செவ்வழுகல் நோய் தாக்குதல் தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் காணப்படுகின்றது. இதைக் கட்டுப்படுத்த கரும்புக் கரணைகளை 0.1 சதவீதம் கார்பன்டெசிம் (அ) 0.05 சதவீதம் டிரைட்மெபன் என்ற கரைசலில் 15 நிமிடம் ஊற வைத்து விதை நேர்த்தி செய்து நடவு செய்ய வேண்டும்.

நிலக்கடலை: நாமக்கல் மாவட்டத்தில் இலைச் சுருட்டுப் புழுவின் தாக்குதல் காணப்படுகிறது. விளக்குப் பொறிகளை வைத்து பூச்சிகளின் நடமாட்டத்தினைக் கண்காணிக்கவும், தேவைப்படின் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீதம் தயாரித்து தெளிக்கவும்.

தருமபுரி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் இலைப்புள்ளி நோய்

தென்படுகின்றது. இதைக் கட்டுப்படுத்த கார்பன்டெசிம் 0.1 சதவீதக் கரைசல் (அ) மேங்கோசெப் (0.2) சதவீத கரைசல் (அ) குளோரேதலானில் (0.2) சதவீத கரைசலைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

பப்பாளி மாவுப் பூச்சி: மரவள்ளி, பப்பாளி, மல்பெரி பயிரிடும் விவசாயிகள் பப்பாளி மாவுப் பூச்சியின் தாக்குதலைக் கண்காணிக்கவும்.

இவற்றைக் கட்டுப்படுத்த அருகில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கல்லூரிகள், ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் வேளாண் அறிவியல் நிலையங்களை அணுகி ஒட்டுண்ணிகளை இலவசமாகப் பெற்று மாவுப் பூச்சியினைக் கட்டுப்படுத்தலாம்.

மேலும் விவரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-641003. தொலைபேசி: 0422-6611214.

பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை - 641003. தொலைபேசி: 0422-6611226.

**விதை நெல் பராமரிக்க ஆலோசனை**

First Published : 12 Jan 2012 12:00:00 AM IST



கடலூர்: கடலூர் மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட நெல் விதைப் பண்ணை வயல்களில் உள்ள நெல் மணிகளின் தரத்தைப் பராமரிக்கும் வழிமுறைகள் குறித்து கடலூர் மாவட்ட வேளாண் துறை ஆலோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து விதைச்சான்று உதவி இயக்குநர் ஹரிதாஸ் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கடலூர் மாவட்டத்தில் கடந்த மாதம் வீசிய புயல் காற்றில் நெல் விதைப் பண்ணை வயல்களில் பயிர்கள் சாயந்ததாலும், நெல் மணிகள் ஒன்றோடொன்று உராய்ந்ததாலும் மணிகளின் நிறம் பழுப்பாகிக் காணப்படுகிறது.

வயல்களில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேல் சாய்ந்திருந்தால் விதை நெல்லுக்கு ஏற்றுக் கொள்ள இயலாது. சம்ப பருவத்தில் 600 ஹெக்டேரில் நெல் விதைப் பண்ணைகள் அமைத்து சான்று விதை பெற்றிட பதிவு செய்யப்பட்டு உள்ளது.

இப்பருவத்தில் சம்பா மசூரி, அம்பை 16, ஆடுதுறை 38, ஆடுதுறை 39, கோ 43, கோ (ஆர்) 50, மேம்படுத்தப்பட்ட வெள்ளைப் பொன்னி மற்றும் நீண்டகால ரகமான சாவித்திரி ஆகியவை அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

விதை தரத்தைப் பராமரிக்கும் வழிமுறைகள்: வயல்களில் 2 அங்குல உயரத்துக்குக் குறைவாகத் தண்ணீர் பாய்ச்சி பராமரிக்க வேண்டும். அறுவடைக்கு 10 நாள்களுக்கு முன் தண்ணீர் முழுவதையும் வடிகட்டிவிட வேணடும். நெல் கதிர்களில் 90 சதம் மணிகள் வைக்கோலின் நிறத்தில் இருந்தால் அது அறுவடைக்கு ஏற்ற தருணம்.

தக்க தருணத்துக்கு முன்னரே அறுவடை செய்து உலர வைக்கும் போது, விதைகள் சுருங்கி சிறுத்து விடுவதுடன் முளைப்புத் திறனும் குறைந்து விடும்.

காலம் கடந்து அறுவடை செய்தால் விதைகளின் நிறம் பனி விழுந்து மங்கி விடுவதுடன் பூஞ்சாணங்களின் தாக்குதலுக்கும் உள்ளாகும். புயல் பாதித்த கதிரில் மகரந்தச் சேர்க்கை பாதிப்பால் பதர் அதிகமாக இருக்கும்.

எனவே அறுவடை செய்த குவியல்களை இயந்திரத்தினாலோ, பணியாளர்களைக் கொண்டோ பதர் முழுவதும் போகும் அளவுக்குத் தூற்றி சுத்தம் செய்ய வேண்டும். பிரித்து எடுத்த விதைகளை சில நாள்கள் குவித்து வைத்தால், விதைகள் சூடேறி, முளைப்புத்திறன் குறையும். எனவே பிரித்தெடுத்த விதைகளை உடனே உலர வைக்க வேண்டும்.

கதிர் அறுவடை செய்யும் இயந்திரங்களை ஒரு ரகத்துக்கு பயன்படுத்தி விட்டு, வேறு ரகத்துக்கு மாற்றும் போது, இயந்திரங்களை நன்கு சுத்தம் செய்ய வேண்டும். இல்லையெனில் மற்ற ரகக் கலப்பினால் விதைகளின் இனத்தூய்மை பாதிக்கப்படும்.

விதை நெல்லின் ஈரப்பதம் 13 சதம் இருக்குமாறு காயவைத்து சுத்திகரிப்பு நிலையத்துக்கு புதிய கோணிப்பைகளில் நிரப்பி அனுப்ப வேண்டும். விதை மூட்டைகளை மரக்கட்டை அட்டகம் அல்லது, தார்ப்பாய்களின் மீது அடுக்கி வைக்க வேண்டும்.

வெறும் தரை அல்லது சுவர் மீது சாய்த்து அடுக்கினால் விதைகளின் முளைப்புத்திறன் பாதிக்கும். விதை நெல் உற்பத்தியில் ஈடுபட்டு இருக்கும் விவசாயிகள் இந்த ஆலோசனைகளைக் கடைப்பிடித்து தரமான விதை நெல்லை உற்பத்தி செய்யலாம் எனச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**'விரைவில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தொடங்கப்படும்'**

First Published : 11 Jan 2012 11:58:10 AM IST

சிவகங்கை, ஜன. 10: சிவகங்கை மாவட்டத்தில் அடுத்த மாத வாக்கில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும். விவசாயிகள் அங்கு தங்கள் நெல்லுக்குத் தகுந்த விலை பெறலாம் என்று மண்டல மேலாளர் பா. சகுந்தலா கூறினார்

சிவகங்கை மாவட்டத்தில் 2011-12-ம் காரீப் பருவ நெல் பயிரிடப்பட்டு, தற்போது பல இடங்களில் அறுவடைக்குத் தயார் நிலையில் உள்ளது. ஆகவே, நடப்பு சம்பா 2012 பருவத்தில் தமிழக அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நெல் கொள்முதல் செய்வதற்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, விரைவில் 34 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும். மேலும், தாலுகா அளவிலான 6 கொள்முதல் நிலையங்களும் செயல்படும். விவசாயிகள் கொண்டுவரும் நெல்லுக்கு அரசு நிர்ணயித்துள்ள விலையின்படி கொள்முதல் செய்யப்படும்.

அதாவது, கிரேடு ஏ நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,110, ஊக்கத் தொகை ரூ.70 என ரூ.1,180-க்கு கொள்முதல் செய்யப்படும். சாதாரண நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,080, ஊக்கத் தொகை ரூ.50 சேர்த்து ரூ.1,130-க்கு கொள்முதல் செய்யப்படும்.

ஈரப்பதம் 17 சதவீதம் வரை இருக்கும் நெல் கொள்முதல் செய்யப்படும். நெல் தூற்றும் இயந்திரத்துக்கான கூலி ஏதும் இல்லை. கொள்முதல் செய்யும் நெல்லுக்கு உரிய பட்டியலில் உள்ள தொகையைக் கேட்டுப் பெறலாம். இதர செலவுகள் எதுவும் இல்லை என்றார்.

**நெல் விளையும் பூமி அழிகிறது!**

நமது நிருபர்

First Published : 11 Jan 2012 01:16:26 PM IST

நாகர்கோவில், ஜன. 10: கன்னியாகுமரி மாவட்டத்தில் விளைநிலங்களை வீட்டுமனைகளாக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதிகாரிகளின் கண்களில் மண்ணைத்தூவும் வகையில் மாட்டு வண்டிகளில் மணலைக் கடத்துகின்றனர்.

தமிழகத்தின் பரப்பளவில் 2 சதவிகிதத்தை மட்டுமே கொண்டுள்ள இம்மாவட்டம், 60 ஆண்டுகளுக்கு முன்புவரை பசுமையான பகுதியாகக் காட்சியளித்தது. ஏறக்குறைய 85,802 ஹெக்டேர் நிலப்பரப்பு பயிரிடும் பகுதியாக 1950-ம் ஆண்டுவாக்கில் இருந்துள்ளது. திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் நெல் களஞ்சியமாக இம்மாவட்டம் திகழ்ந்துள்ளது.

ஆனால் இப்போது இம்மாவட்டத்தின் பசுமை குறைந்து வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்புவரை மாவட்டத்தின் விவசாயப் பரப்பு 50 ஆயிரம் ஹெக்டேராக இருந்தது. இப்போது 25 ஆயிரமாகக் குறைந்துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

நாகர்கோவில் அருகேயுள்ள பார்வதிபுரத்தில் இருந்து சுங்கான்கடை வரையிலான பசுமையான நெல் விளைநிலங்கள் கண்கொள்ளாக் காட்சியாக சில ஆண்டுகளுக்கு முன்புவரை இருந்தது. ஆனால் இப்போது அதன் பெரும்பகுதி கான்கிரீட் கட்டடங்களாகக் காட்சியளிக்கின்றன. இதுபோல, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நெல் பயிரிடும் நிலங்கள் கான்கிரீட் காடுகளாக மாறி வருகின்றன.

மூன்று ஆண்டுகளுக்கு குறையாமல் தரிசு நிலங்கள் அல்லாத பயிர் நிலங்களை விற்கவோ, வாங்கவோ கூடாது என்று அரசாணை உள்ளது. ஆனால் அது நடைமுறைக்கு கொண்டுவரப்படவில்லை. வியாபார நோக்கில் நன்செய் நிலப்பரப்புகளை வீட்டுமனைகளாக்கும் நடவடிக்கையின் தீவிரம் குறித்து 2010-ம் ஆண்டு தொடக்கத்தில் மாவட்ட நிர்வாகத்தின் கவனத்துக்கு பல்வேறு அமைப்புகளும் கொண்டு சென்றன. இதையடுத்து, அப்போதைய ஆட்சியர் ராஜேந்திர ரத்னூ சில நடவடிக்கைகளை எடுத்தார்.

நன்செய் நிலங்களை வீட்டுமனைகளாக மாற்றும்நோக்கில், தவறான தகவல்களுடன் பத்திரப் பதிவுகள் மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள சார்பதிவாளர்களுக்கு அறிவுரை வழங்குமாறும், இது தொடர்பாக வழங்கப்பட்ட சுற்றறிக்கை நகல்களை அனுப்பிவைக்குமாறும் ஆட்சியர் உத்தரவிட்டிருந்தார்.

தவறான பத்திரப்பதிவுகளைத் தடுக்க மேற்கொண்ட இந்நடவடிக்கையால் விளைநிலங்கள் வீட்டுமனைகளாக்கப்படுவது ஓரளவுக்கு தடுக்கப்பட்டது. ஆனால் கடந்த ஆண்டு தொடக்கத்தில் மாவட்டத்தில் கும்பப்பூ சாகுபடி அறுவடை முடிந்த நிலங்களில் மண்ணைக்கொட்டி மேடுகளாக்கி வீட்டுமனைகளாக்கும் நடவடிக்கைகளில் சிலர் ஈடுபட்டனர்.

பின்னர் சட்டப் பேரவைத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தல் வந்ததால் இதுபோன்ற நடவடிக்கைகளைத் தடுக்க மாவட்ட நிர்வாகம் கவனம் செலுத்தவில்லை.

இந்நிலையில், இப்போது விளைநிலங்களில் பல்வேறு கட்டுமானங்கள் நடைபெற்று வருவது குறித்து சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். சாதாரணமாக விளைநிலங்களை வீட்டுமனைகளாக்குவோர் டெம்போ, லாரி, டிராக்டர் போன்ற வாகனங்களில் மண்ணை எடுத்துவந்து விளைநிலங்களில் கொட்டுவார்கள். இதற்கு தேவையான மண்ணை மலைப்பகுதிகளில் இருந்து சட்டத்துக்குப் புறம்பாக எடுத்துவந்து கொண்டிருந்தனர். கனிமத்துறையும், வருவாய்த்துறையும் இணைந்து செயல்பட்டு இவ்வாறு மண் கொண்டு செல்வதைத் தடுத்து வருகிறார்கள். இதனால் விளைநிலங்களில் மண்ணைக்கொட்டி வீட்டுமனைகளாக்கும் நடவடிக்கைகளில் தொய்வு ஏற்பட்டது.

இதைப் போக்கும் வகையிலும், அதிகாரிகளின் நடவடிக்கைகளில் இருந்து தப்பவும் இப்போது புது உத்தியை ரியல் எஸ்டேட் உரிமையாளர்கள் கையாள்கிறார்கள். அதன்படி மாட்டு வண்டிகளில் மண்ணைக்கொண்டு சென்று விளைநிலங்களில் கொட்டி வருகிறார்கள்.

இந்த மாட்டு வண்டிகளைப் பறிமுதல் செய்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகளும் தயங்கி வருகிறார்கள். அவ்வாறு மாட்டு வண்டிகளைப் பறிமுதல் செய்து கனிமவளத்துறை அலுவலகம் செயல்படும் ஆட்சியர் அலுவலக வளாகத்துக்கு கொண்டு சென்றால், மாடுகளுக்கு உணவாக வைக்கோல், தண்ணீர் கொடுப்பது, அவற்றை சுத்தம் செய்வது, அவற்றின் கழிவுகளை அப்புறப்படுத்துவது என்றெல்லாம் பல்வேறு சிக்கல்களைச் சந்திக்க நேரிடும். இதனால் மாட்டுவண்டிகளைக் கைப்பற்ற அதிகாரிகள் தயாராக இல்லை. இது விளைநிலங்களை வீட்டுமனைகளாக்குவோருக்கு சாதகமாக இருக்கிறது.

அனுமதியற்ற மனைப்பிரிவை வரைமுறைப்படுத்தி சட்டவிரோதமாக அழிக்கப்பட்டுள்ள விளைநிலங்களை மீட்பதற்கான முழு அதிகாரமும் மாவட்ட நிர்வாகத்துக்கு உண்டு. இதில் விரைந்து நடவடிக்கை எடுக்காவிடில் இம்மாவட்டத்தில் விவசாயம் கேள்விக்குறியாகிவிடும் என்றனர் சமூக ஆர்வலர்கள் ஆர்.எஸ். லால்மோகன் மற்றும் மீரான்மைதீன்.

எனவே, சம்பந்தப்பட்ட விளைநிலங்களை மீட்பதற்கு தகுந்த எடுக்க வேண்டும். நெல் விளையும் பூமியான நாஞ்சில் நாட்டின் பெருமையைக் காக்க மாவட்ட நிர்வாகம் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

**நாளை கரும்பு விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 11 Jan 2012 01:02:54 PM IST

திருச்சி, ஜன. 10: திருச்சியில் வியாழக்கிழமை (ஜன. 12) கரும்பு விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் தெரிவித்திருப்பது:

திருச்சி மாவட்டத்தில் கரும்பு விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சியரகக் கூட்ட மன்றத்தில் நடைபெறவுள்ளது. கூட்டத்தில் கரும்பு விவசாயிகள் கலந்து கொண்டு நீர்ப் பாசனம், கரும்பு விவசாயம் தொடர்பான கடனுதவிகள், கரும்பு விவசாய மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள், கரும்பு விவசாயம் தொடர்பான குறைகள் ஆகியவை குறித்து நேரிலோ, மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம். கரும்பு சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார் அவர்.

**நெல் பயிரில் புகையானை கட்டுப்படுத்த யோசனை**

First Published : 11 Jan 2012 12:55:23 PM IST

அறந்தாங்கி, ஜன. 10: ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் தற்போது பயிரிடப்பட்டுள்ள சம்பா நெல் பயிரில் புகையான் தாக்குதலைக் கட்டுப்படுத்துவது குறித்து ஆவுடையார்கோவில் வேளாண்மை உதவி இயக்குநர் நா. அடைக்கப்பன் யோசனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியது:

தற்போது ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் பயிரிடப்பட்டுள்ள சம்பா நெல் பயிரில் புகையான் (பழுப்பு தத்துப் பூச்சி) தாக்குதல் சில இடங்களில் பொருளாதார சேத நிலைக்கு அதிகமாகக் காணப்படுகிறது.

இந்தப் பூச்சி தனது இளநிலை பருவங்கள் மற்றும் வளர்ந்த பருவங்களில் கூட்டம் கூட்டமாக நெல் பயிர்களில் தூரின் அடிப்பாகத்தில் இருந்து கொண்டு தன் ஊசி போன்ற வாயால் சாற்றை உறிஞ்சுகிறது. இதனால், பயிரின் வளர்ச்சி தடைபடுகிறது.

இந்தப் பூச்சி தாக்குதலால் பயிர் திட்டு திட்டாக வட்ட வடிவில் காயத் தொடங்கி, பிறகு வயல் முழுவதும் வாடி காய்ந்துவிட்டதைப் போல் காணப்படும். வயலில் தண்ணீர் தேங்கியுள்ள இடங்களில் இந்தப் பூச்சியின் தாக்குதல் அதிகமாக இருக்கும்.

புகையானை கட்டுப்படுத்த வயலில் நீரை வடிகட்டி காயவிட்டு, பிறகு நீர்ப் பாய்ச்ச வேண்டும். பூச்சியின் தாக்குதல் உள்ள போது தழைச்சத்து இடுவதை தவிர்க்க வேண்டும். மருந்து தெளிக்கும் போது தூர்ப் பகுதியில் நன்கு படுமாறு தெளிக்க வேண்டும்.

புப்ரோபெசின் 25 எஸ்.சி. மருந்து ஓர் ஏக்கருக்கு 350 மிலி, தையமெக்தோசம் 25 டபுள்யு டீ.ஜி. மருந்து ஏக்கருக்கு 40 கிராம், பிப்ரோனில் 5 எஸ்.சி. மருந்து ஏக்கருக்கு 250 மில்லி லிட்டர் என்ற அளவில், இதில் ஏதாவது ஒரு மருந்தை தெளித்து புகையானை கட்டுப்படுத்தலாம் என்றார் அவர்.

**உணவு பாதுகாப்பு அலுவலர்கள் ஆய்வு**

First Published : 11 Jan 2012 02:38:36 PM IST

மதுராந்தகம்,ஜன.10: மதுராந்தகம் நகரில் உள்ள கடைகளில் விற்கப்படும் குடிநீர் பாக்கெட்களின் தரம் குறித்து உணவு பாதுகாப்பு அலுவலர்கள் செவ்வாய்கிழமை திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

இதன்படி உணவு பாதுகாப்பு அலுவலர்கள் ஜி.துரை,எஸ்.விமலவிநாயகம்,ஜோசப் பெர்னாண்டோ,கிளமண்ட் தேவபாலன் ஆகியோர் கொண்ட குழுவினர் மதுராந்தகம் நகரில் பஸ் நிலையம்,மருத்துவமனை சாலை,தேரடி வீதி உள்ளிட்ட பகுதிகளில் 50-க்கும் மேற்பட்ட குளிர்பானக் கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, குடிநீர் பாக்கெட்கள்,பாட்டில்களின் தரம்,உற்பத்தி தேதி,காலாவதியாகும் தேதி குறித்து ஆய்வு செய்தனர்.

**வெங்காயம், மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்ய வலியுறுத்தல்**

First Published : 11 Jan 2012 12:50:59 PM IST

பெரம்பலூர், ஜன. 10: வெங்காயம், மஞ்சள் உள்ளிட்ட அனைத்து விவசாய பொருள்களுக்கும் கட்டுப்படியான விலை நிர்ணயம் செய்து, அரசே கொள்முதல் செய்யும் வகையில் தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. பெரம்பலூர், அரியலூர் மாவட்ட தமிழக விவசாயிகள் சங்க செயற்குழுக் கூட்டம் பெரம்பலூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு அந்த சங்கத்தின் மாநிலச் செயலர் ஆர். ராஜாசிதம்பரம் தலைமை வகித்தார். பெரம்பலூர் மாவட்டத் தலைவர் பி. மாணிக்கம், அரியலூர் மாவட்டத் தலைவர் என்.பி. அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், தமிழக அரசு கரும்பு டன்னுக்கு ரூ. 2,100 என அறிவித்துள்ளது. இது விவசாயிகளுக்கு அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே, முத்தரப்புக் கூட்டத்தை கூட்டி கரும்புக்கு விலையை உயர்த்தி அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வெங்காயம் குவிண்டாலுக்கு ரூ. 2,000, நெல் குண்டாலுக்கு ரூ. 2,000, மரவள்ளி கிழங்கு டன் ஒன்றுக்கு ரூ. 10,000, மஞ்சள் குண்டாலுக்கு ரூ. 15,000, பருத்தி ரூ. 7,000, மக்காச்சோளம் குவிண்டாலுக்கு ரூ. 2,000 என விலை நிர்ணயம் செய்ய, மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும்.

தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் ஆண்டுக்கு 100 நாள் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை, விவசாய பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான உத்தரவு பிறப்பிக்கும் வரையில், விவசாய வேலை காலங்களில் விடுமுறை அளிக்க வேண்டும். விவசாயத்துக்காக பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் தடையில்லாமல் தொடர்ந்து மின்சாரம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில், அரியலூர் மாவட்டச் செயலர் வி. விசுவநாதன், பெரம்பலூர் மாவட்டச் செயலர் வி. நீலகண்டன், பெரம்பலூர் மாவட்டப் பொருளாளர் அ. மணி, வட்டாரப் பொறுப்பாளர்கள் கே. துரைராஜ், எஸ்.கே. செல்லகருப்பு, ஆர். சுந்தராஜன், பி. தங்கவேல், கே. ஜெயபிரகரன், கே. அன்பழகன், இ. கோவிந்தசாமி, ராம ஜெயம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பூச்சித் தாக்குதல்: கத்தரி சாகுபடி பாதிப்பு**

First Published : 11 Jan 2012 02:34:10 PM IST

திருத்தணி, ஜன. 10: திருத்தணி பகுதியில் பூச்சித் தாக்குதலால் கத்தரிக்காய் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.

திருத்தணியை அடுத்த நாணமங்கலம், தாழவேடு, தும்பிகுளம், வேலஞ்சேரி, பொன்பாடி, முருகம்பட்டு, டி.வி.புரம் மத்தூர் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் தோட்டப்பயிர் சாகுபடி பிரதானமாக மேற்கொள்ளப்படுகிறது. இதில் கே.ஜி.கண்டிகை, நாணமங்கலம், பெருங்களத்தூர் பகுதிகளில் பெருமளவு கத்தரிக்காய் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.

கடந்த 3 மாதத்திற்கு முன்பு தொடங்கிய, கத்தரி சாகுபடி தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளதால் அறுவடை குறைந்துள்ளது. இந்நிலையில் கத்தரியில், பூச்சித் தாக்குதல் அதிகரித்துள்ளதால் மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், கிலோ ரூ.8-க்குக் கொள்முதல் செய்யப்பட்ட கத்தரி, தற்போது ஆறு ரூபாயாகக் குறைந்துள்ளது.

சென்னைக்குக் கொண்டு சென்று கத்தரிக்காயை விற்றால், கிலோ ரூ.10-முதல் ரூ.12-வரை விற்பனையாகிறது. பூச்சித் தாக்குதலும், விலை குறைவும் கத்தரி விவசாயிகளைக் கடுமையாக பாதித்துள்ளது.

இது குறித்துக் கத்தரிக்காய் பயிரிட்டுள்ள விவசாயி பெருமாள் என்பவர் கூறுகையில், கடந்த 3-மாதத்துக்கு முன்பு கத்தரி விளைச்சல் அமோகமாக இருந்தது.

தற்போது திடீரென பெய்த கனமழையால் கத்தரிக்காய் செடிகளில் விளைச்சல் குறைந்து விட்டது. செடிகளில் பூச்சித் தாக்குதல் உள்ளதால், நிறைய கழிவு போகிறது.

தற்போதுள்ள கத்தரிக்காய் செடிகளை அழித்துவிட்டு மீண்டும் வேர்கடலை விவசாயம் செய்ய முடிவு செய்துள்ளேன் என்றார்.

**விருதுநகர் அருகே கரும்பு அறுவடை மும்முரம்**

First Published : 11 Jan 2012 12:02:47 PM IST

விருதுநகர், ஜன. 11: பொங்கல் திருநாள் நெருங்கி வருவதை முன்னிட்டு விருதுநகர் அருகே கிராமங்களில் செங்கரும்பு அறுவடை மும்முரமாக நடைபெற்று வருகிறது.

விருதுநகர்-மதுரை ஆகிய மாவட்ட எல்லைப் பகுதிகளான நடையனேரி, முருகனேரி, செங்குளம், தாதாங்குளம், செங்கமலநாச்சியார்புரம், சிவகாசி, வத்ராயிருப்பு, செங்குன்றாபுரம் உள்பட பெரும்பாலன பகுதிகளில் செங்கரும்பு பயிரிடப்பட்டுள்ளது.

நடையனேரி, முருகனேரி பகுதியில் விளைவிக்கப்படும் செங்கரும்பு அதிக தித்திப்பு உள்ளதாக இருக்கும். அதனால், பல்வேறு பகுதிகளில் இக்கரும்புக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

அதனால், கரும்பை வாங்க வியாபாரிகளிடையே போட்டி ஏற்பட்டுள்ளது. கூலி ஆள்கள் கிடைக்காததது, உரவிலையேற்றம் போன்ற காரணங்களினால் குறைந்த அளவில் கரும்பு பயிரிட்டுள்ளனர். கடந்த ஆண்டு 300 ஹெக்டேரில் பயிரிட்டு இருந்த நிலையில், தற்போது 200 ஹெக்டேரில் செங்கரும்பு பயிரிடப்பட்டுள்ளது.

நடையனேரி கரும்பு விவசாயி மாரியப்பன் கூறுகையில், 2 ஏக்கரில் கரும்பு பயிரிட்டுள்ளேன். அறுவடைக்கு ஆள்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு கரும்பு வெட்டும் கூலி ரூ.300. தற்போது ரூ.450 வரை கூலியாக வழங்கப்படுகிறது என்றார்.

மதுரை வியாபாரி முத்துக்கணேசன் கூறியதாவது:

இப்பகுதியில் கரும்பு குறைந்த அளவே பயிரிட்டுள்ளதால் வியாபாரிகளுக்கு இடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. தோட்டங்களில் நேரடியாக மரக்கால் கணக்கில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 10 மரக்கால் ரூ.2 லட்சம் வரை விலை போகிறது. ஒரு மரக்கால் அளவு நிலத்தில் விளைந்த செங்கரும்பு ரூ.20 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்படுகிறது. நன்றாக விளைந்தால் 140 முதல் 160 கட்டுக்கள் வரை இருக்கும். அதனால், ஒரு கட்டு கரும்புக்கு ரூ.220 முதல் 250 வரையில் தரத்திற்கு ஏற்றவாறு விற்பனை இருக்கிறது. பொங்கலுக்கு முதல் நாள் இதைவிடக் கூடுதல் விலைக்கு விற்கப்படும் என்றார்.

**பால்பண்ணை தொழிலுக்கு ஜன.20 இலவச களப் பயிற்சி**

First Published : 11 Jan 2012 12:02:37 PM IST

ராஜபாளையம், ஜன. 10: ராஜபாளையம் கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் லாபகரமான பால்பண்ணை தொழிலுக்கான இலவச களப்பயிற்சி ஜன.20-ம் தேதி நடைபெற உள்ளது.

ராஜபாளையம் கால்நடைப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் இப்பயிற்சி நடைபெறும். இதில் குறைந்த செலவில் கால்நடைகளுக்கான தீவனம் தயாரித்தல், தீவனப் பயிர்கள், அசோலா தீவன உற்பத்தி ஆகிய செயல்முறை விளக்கம் இடம் பெறும்.

பயிற்சியில் பங்கேற்க விரும்புபவர்கள் ஜன.18-ம் தேதிக்குள் பயிற்சி மையத்தில் நேரிலோ அல்லது 04563-220244 என்கிற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு முன்பதிவு செய்ய வேண்டும்.

இத்தகவலை பயிற்சி மையத் தலைவர் எம்.முருகன் வெளியிட்டுள்ள ஒரு செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தினமலர்
உண்மையின் உரைகல்

"கரும்பு, மஞ்சள், பானை தட்டுபாட்டால் பொங்கல் கொண்டாட்டம் சந்தேகம் தான்'

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2012,01:23 IST

புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், பொங்கல் வைக்கும் பானைகள், மஞ்சள், கரும்பு என, பொங்கல் பண்டிகைக்கு தேவையான அனைத்தும் புயலில் அழிந்து விட்டன.தானே புயல் பாதிப்புகளை, துடைத்தெடுக்கவே பல மாதங்களாகும் என்ற நிலை, கடலூர் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, விவசாயிகளின் பாதிப்புக்கு, எந்த நிவாரணமும் ஈடுசெய்ய முடியாத நிலை உள்ளது.நொறுங்கிய பானைகள்வரும் 14ம் தேதி, பொங்கல் பண்டிகை கொண்டாடப்படும் நிலையில், பண்டிகைக்கான எந்த அறிகுறியும் கடலூர் மாவட்டத்தில் இல்லை. எங்கு திரும்பினாலும், சேதமும், சோகமும் தான் மக்கள் மனதில் பரவி நிற்கிறது.பொங்கல் பண்டிகையில் பொங்கல் வைப்பதற்கான பானைகள் கூட, புயல் காற்றில் பறந்து விட்டன. பொங்கலை எதிர்பார்த்து, பானைகள் செய்து வைத்திருந்தவர்களின் பானைகள் காற்றில் நொறுங்கி, தூக்கி எறியப்பட்டுள்ளன. குறிஞ்சிப்பாடி தாலுகாவிற்குட்பட்ட செம்மங்குப்பம் பகுதியில், மீதமிருந்த மண்ணை வைத்து, பானைகள் செய்து, சாலையோரம் காயவைத்துள்ளனர்.பானைகள் சேதமானது குறித்து குயவர், சுமித்ரா கூறியதாவது:இந்த ஆண்டு எங்களது பிழைப்பு போய் விட்டது. அனைத்து பானைகளும் காற்றில் பறந்து நொறுங்கி விட்டன. பொங்கலுக்கு தான் பானைகள் விற்கும். தற்போது விற்கவும் பானைகள் இல்லை, எங்கள் முதலீடும் போய் விட்டது. மீதமிருக்கும் குறைந்த மண்ணில் பானைகள் செய்கிறோம். பானைகள் தட்டுப்பாட்டால், சிறிய பானை கூட 50 ரூபாய்க்கு விற்றால் தான், பொங்கல் நாளிலாவது நாங்கள் சாப்பிட முடியும்.இவ்வாறு அவர் கூறினார்.கிடைத்த விலைக்கு விற்பனைஇதேபோல், மாவட்டம் முழுவதும் மஞ்சள், கரும்பு பயிர்களும் காற்றில் நாசமாகிவிட்டன.

பொங்கல் கரும்புகள் அனைத்தும், காற்றில் சாய்ந்து சோலை கருகியுள்ளது. இதுகுறித்து, சமட்டிக்குப்பம் விவசாயி சக்ரபாணியின் மனைவி, அம்சயா கூறும்போது,""காற்றில் நாசமான கரும்புகளை, பொங்கலுக்கு விற்கமுடியாது. அதனால், இப்போதே கேட்ட விலைக்கு கொடுக்கிறோம். இந்த ஆண்டு எங்கள் பிழைப்பு போச்சு," என்றார்.இதேபோல், கடலூர் மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளில், சாலையோர கடைகளும் காற்றில் தூக்கி எறியப்பட்டதால்,

பொங்கல் விற்பனையில் மும்முரமாக இருக்க வேண்டிய கடைகளில், தற்போது தான் சேதமான கடையை ஒழுங்குபடுத்தும் பணியே நடக்கிறது. இந்த ஆண்டு கடலூர் மக்களுக்கு மின்சாரம் இல்லாத, விவசாயம் அழிந்த, வாழ்வாதாரம் இழந்த துயரநாளாகத்தான், பொங்கல் பண்டிகை இருக்கும்.

**முளை விடும் நெற்பயிர்கள்விவசாயிகள் பெரும் கவலை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2012,01:22 IST

நெல்லிக்குப்பம்:புயலில் பாதித்த அறுவடைக்குத் தயாரான நெற்பயிர்கள் முளைத்ததால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.கடலூர் மாவட்டத்தில் "தானே' புயலால் பல ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெல், கரும்பு, வாழை, தானிய பயிர்கள், முந்திரி, பலா, தென்னை மரங்கள், அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர்கள் சேதமடைந்தன.மேலும் மழை பெய்து, நிலங்கள் ஈரமாக உள்ளதால் இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்ய இயலாத நிலை உள்ளது. இதற்கிடையே முற்றிய நெற்பயிர்கள் ஈரத்தில் முளைக்கத் துவங்கி விட்டன. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.இதேப்போன்று கரும்பு வெட்ட ஆட்கள் கிடைக்காததால், அவை கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வயல் ஈரமாக இருப்பதால் இயந்திரம் மூலம் அறுவடை செய்ய முடியாத நிலை உள்ளது.அரசு போதுமான நிவாரணம் வழங்காத நிலையில் நெல், கரும்பு பயிரிட்ட விவசாயிகள், தாங்க முடியாத நஷ்டத்தை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

**விவசாயிகள் கோரிக்கை ஏற்பு விற்பனைக்கு வந்தாச்சு, உரம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2012,00:22 IST

திருப்பூர் :ஆர்.டி.ஓ., தலைமையில் நடந்த விவசாயிகள் குறைகேட்பு கூட்டத்தில், "தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கான உர வகைகள் விற்பனை செய்யப்படுவதில்லை,' என்று புகார் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களில் உர வகைகள் விற்பனைக்கு இருப்பு வைக்க அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

மங்கலம் மற்றும் ஆண்டிபாளையம் கூட்டுறவு வங்கிகளில் உர வகைகள் நீண்ட காலமாக விற்பனை செய்வதில்லை; நகைக்கடன் மட்டுமே வழங்கப்படுகிறது என்றும் விவசாயிகள் தெரிவித்திருந்தனர். இதையடுத்து தற்போது ஆண்டிபாளையம் கூட்டுறவு சங்கத்தில் டி.ஏ.பி., உரம் 5 டன், யூரியா 3 டன் மற்றும் பொட்டாசியம் 2 டன் ஆகியன இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து கூட்டுறவு துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, "விவசாயிகள் தங்களின் தேவைக்கேற்ப அவர்களுக்கு அருகாமையில் உள்ள மற்ற வங்கிகளில் உரங்களை வாங்கிப் பயன்படுத்தலாம்,' என்றனர்.
கோவில்வழி கூட்டுறவு வங்கியில் தொடர்ந்து உர விற்பனை நடந்து வருகிறது. மேலும் அங்கு தேவைக்கேற்ற அளவில் அனைத்து உரங்களும் இருப்பில் உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இருப்பில் உள்ள உரங்களின் நிலவரம் குறித்து விவசாயிகளுக்கு தகவல் அளிக்கப்படுகிறது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மானிய விலையில் தேயிலை நாற்றுகள் பொரங்காடு சீமை நல சங்கம் வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2012,00:51 IST

கோத்தகிரி : "கோத்தகிரி பகுதி விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் 3 லட்சம் தேயிலை நாற்றுகள் வழங்கவேண்டும்,' என வலியுறுத்தப்பட்டுள்
ளது.
விவசாய சங்க பொது செயலாளர் காரிகவுடர் மாவட்ட கலெக்டருக்கு அனுப்பியுள்ள மனு: நீலகிரி மாவட்டத்தில் முக்கிய விவசாய பயிராக விளங்கும் பசுந்தேØயிலைக்கு கடந்த பல ஆண்டுகளாக விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
இடு பொருட்களின் விலையேற்றம், கூலி உயர்வு மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை போன்ற காரணங்களால், தேயிலை தோட்டங்களை பராமரிக்க முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுளனர்.
பொருளாதார சிக்கலில் இருந்து மீளவும், தோட்டங்களை பராமரிக்கவும், தேயிலை தோட்டங்களில் நடவு செய்ய மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், நடப்பாண்டு 50 சதவீத மானியத்தில் 3 லட்சம் தேயிலை நாற்றுகள் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு காரிகவுடர் கூறியுள்ளார்.

**நீலகிரியில் மலர் சாகுபடி "ஜோர்'வேளாண் அமைச்சர் பெருமிதம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2012,00:51 IST

கோத்தகிரி : ""குஜராத்தில் நடக்கும் மலர் சாகுபடியை விட, நீலகிரியில் நல்ல முறையில் சாகுபடி நடக்கிறது,'' என வேளாண் அமைச்சர் தெரிவித்தார்.
கோத்தகிரியில் வேளாண்துறை அமைச்சர் தாமோதரன் நிருபர்களின் கூறியதாவது:

நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் படுகர் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஹெத்தையம்மன் பண்டிகைக்கு உள்ளூர் விடுமுறையை அரசு அறிவித்துள்ளது. என்னையும், அமைச்சர் வேலுமணியையும் விழாவில் கலந்து கொள்ளும்படி மாநில முதல்வர் உத்தரவிட்டார். அதன்படி நாங்கள் விழாவில் கலந்து கொண்டோம். மக்களின் வரவேற்பு மற்றும் விழா நடைபெறும் விதம் ஆகியவை, வெகுவாக கவர்ந்தது.
நீலகிரி மாவட்டத்தில் மலர் சாகுபடி விவசாயத்தை ஆய்வு செய்தோம். குஜராத்தில் நடக்கும் மலர் சாகுபடியை விட இங்கு நல்ல முறையில் சாகுபடி நடக்கிறது. நல்ல விலையும் கிடைக்கிறது. தொழில் நுட்பத்தை கையாண்டு உரிய முறையில் விவசாயம் செய்தால் கூடுதல் லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது.
விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க மலர் சாகுபடி செய்ய தேவையான உபகரணங்கள் மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு தாமோதரன் கூறினார்.

**தேனி மாவட்டத்தில் விவசாய உற்பத்தி தொடர்பான ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2012,01:31 IST

கம்பம் : தேனி மாவட்டத்தில் விவசாய உற்பத்தி, சாகுபடி பிரச்னைகள், சாகுபடி பரப்பு, அதிகரித்துள்ளதா, குறைந்துள்ளதா என்பது பற்றிய முழு விபரங்களை சேகரித்து அரசிடம் சமர்ப்பிக்க மாநில விவசாய உற்பத்தி ஆணையர் இன்று தேனிக்கு வருகிறார்.
தமிழ்நாட்டில் நெல், வாழை, திராட்சை, தென்னை உள்ளிட்ட பல்வேறு விவசாய பொருள்கள் சாகுபடி பரப்பு அதிகமாக இருக்கும் மாவட்டங்களில் தேனி மாவட்டமும் ஒன்றாகும். தேனி மாவட்டத்தில் நெல் சாகுபடி பரப்பு, அதிகரித்துள்ளதா, குறைந்துள்ளதா, முல்லைப் பெரியாறு போராட்டத்தால் ஏதேனும் பாதிப்பு உள்ளதா, கடந்த போகத்தில் உற்பத்தி அளவு, உற்பத்தி அளவை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு விசயங்கள் குறித்து ஆய்வு நடத்தி, விபரங்களை சேகரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கென மாநில விவசாய உற்பத்தி ஆணையர் ராம்மோகன் இன்று தேனிக்கு வருகிறார்.

**நெற்பயிரில் ஊட்டச்சத்து குறைபாடு களைய இலை வழி உரமிட வேண்டும்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2012,03:09 IST

தென்காசி:நெற்பயிரில் ஊட்டச்சத்து குறைபாடுகளை களைய இலை வழி உரமிட வேண்டும் என தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் கூறியுள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:""நெற்பயிரில் ஊட்டச்சத்து பற்றாக்குறை இருப்பதை சில அறிகுறிகள் மூலம் தெரிந்து கொள்ளலாம். பழைய இலைகள் வெளிறி

காணப்படும். வயல் முழுவதும் வெளிறிய நிலையில் இருக்கும். இதனை ஒரு லிட்டர் நீருக்கு யூரியா 10 கிராம் என்ற அளவில் கரைத்து தெளித்து நிர்த்தி செய்யலாம். நட்ட ஒன்றிரண்டு வாரங்களில் இலை அடர் பச்சை நிறத்திலும், சரிவர தூர்கள் வெடிக்காமலும் இருப்பது மணிச்சத்து குறைபாட்டின் அறிகுறியாகும். இலைவழி உரமிட்டு இதனை சரி செய்ய இயலாது. பரிந்துரைப்படி மணிச்சத்தை அடியுரமாக இட வேண்டும்.
பொட்டாஷ் சத்து குறைபாட்டால் இலையின் விளிம்பில் துரு நிற புள்ளிகளுடன் பழுப்பு நிறமடைந்த நிலையில் இருக்கும். மேலும் இலை விளிம்புகள் காய்ந்த நிலையில் இருக்கும். ஒரு லிட்டர் நீருக்கு மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தை 10 கிராம் என்ற அளவில் கலந்து தெளித்து இதனை நிவர்த்தி செய்யலாம்.
நுண்ணூட்ட சத்து குறைபாடுநட்ட சில வாரங்களில் இலையில் சிவப்பு கலந்த பழுப்பு நிற புள்ளிகள் காணப்படுவது, செடி சிறுத்து வளர்ச்சியின்றி குறைந்த தூர்களுடன் காணப்படுவது போன்றவை துத்தநாக சத்தின் குறைபாடாகும். ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம் என்ற அளவில் துத்தநாக சல்பேட் உரத்தை கரைத்து இலை வழி தெளித்து சரிசெய்யலாம். வெளி வரும் இளம் இலையின் நுனி வெளுத்து சுருண்டு காய்ந்து காணப்படுவது போரான் சத்தின் குறைபாடாகும். ஒரு லிட்டர் நீருக்கு போரிக் அமிலம் அல்லது சாலுபோர் 2 கிராம் என்ற அளவில் தெளித்து நிர்த்தி செய்யலாம்.

இளம் இலைகள் வெளிறி இருப்பது, மொத்த செடியும் மஞ்சள் நிறத்தில் இருப்பது கந்தக சத்தின் குறைபாடாகும். ஒரு லிட்டர் நீருக்கு கந்தகம் 5 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும். இலை நரம்புகளுக்கிடையே வெளிறி ஆரஞ்சு கலந்த மஞ்சள் நிறத்தில் கோடுகள் காணப்படுவது மெக்னீசிய சத்து குறைபாட்டின் அறிகுறியாகும். இதனை நிர்த்தி செய்ய ஒரு லிட்டர் நீருக்கு மெக்னீசியம் சல்பேன் 5 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.இலை நுனி ஊசி போன்று இருப்பது, இலையில் வெளிறிய கோடுகள் இருப்பது, கரும் பழுப்பு நிறத்தில் காய்ந்திருப்பது தாமிர சத்தின் அறிகுறியாகும். ஒரு லிட்டர் நீருக்கு காப்பர் சல்பேட் 5 கிராம் என்ற அளவில் கரைத்து தெளித்து சரி செய்ய வேண்டும். இளம் இலையின் நுனி வெளிறிய வெள்ளை நிறத்தில் இருப்பது கால்சியம் சத்து குறைபாட்டின் அறிகுறியாகும். சுண்ணாம்பு சத்தை மண்ணில் இடுவது மூலம் நிவர்த்தி செய்யலாம். இலைவழி உரங்களை தெளிக்க ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் நீர் உபயோகித்து ஒட்டும் திரவம் ஒரு லிட்டர் நீருக்கு 0.5 மில்லி என்ற அளவில் சேர்த்து தெளிக்க வேண்டும்.மேற்கண்ட உரங்களை இலைவழி தெளிக்கும் முன் வேளாண்மை துறை அலுவலர்களை தொடர்பு கொண்டு தெளிக்கும் முறைகள் பற்றி தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டும். சத்துகள் குறைபாடு ஏற்பட்ட பின்பே பயிரில் அறிகுறிகள் தெரிவதால் நிர்த்தி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.பேரூட்ட மற்றும் நுண்ணூட்ட சத்துகளின் அளவை ஆய்வு செய்ய மண் பரிசோதனை செய்து அதன்படி வேளாண்மை துறையால் வழங்கப்படும்

விவசாயிகளுக்கான ஒருங்கிணைந்த கையேட்டை பெற்று அதன்படி சமச்சீர் உர நிர்வாகத்தை ஆரம்பத்திலிருந்தே பின்பற்றுவதால் சத்துகள் குறைபாடு ஏற்படுவதை தவிர்க்கலாம்" என வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் அறிக்கையில் கூறியுள்ளார்.

**பயறு விளைச்சலை அதிகரிக்க ரூ.212 கோடி ஒதுக்கீடு**

ஜனவரி 11,2012,10:49



சென்னை:பயறு வகை பயிர்களில் அதிக விளைச்சலைப் பெற, "பயறு அதிசயம்' என்ற, ஊட்டப் பொருள் கலவையை தெளிக்கும் திட்டத்திற்காக, 212.50 கோடி ரூபாயை ஒதுக்கி, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.தமிழகத்தில் பயறு வகைகள், ஆறு லட்சம் ஹெக்டேர் நிலத்தில் பயிரிடப்பட்டாலும், மகசூல் இரண்டு லட்சம் டன் என, குறைந்த அளவிலேயே உள்ளது. எனவே, நவீன தொழில்நுட்பத்தை விவசாயிகளிடம் பரப்பி, மகசூலை அதிகரிக்க, தமிழக அரசு முடிவெடுத்துள்ளது.

புதிய பயிர் ஊக்கிபயறு வகைகளுக்கு தேவையான இலை, மணி, சாம்பல் சத்துக்கள் மற்றும் இரும்பு, போரான் போன்ற நுண்ணூட்டச் சத்துக்கள் மற்றும் ஆக்சின் எனும் பயிர் ஊக்கி ஆகியவை அடங்கிய, "பயறு அதிசயம்' என்ற, பயிர் ஊக்கியை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் உருவாக்கி உள்ளது. பூப்பூக்க துவங்கும் போதும், காய் பிடிக்கும் நேரத்திலும் பயிர்களில் இதை தெளிப்பதால், 10 முதல், 20 சதவீதம் அதிக மகசூல் பெற இயலும். பூ உதிர்தல் பெருமளவு குறைக்கப்பட்டு, உற்பத்தித் திறன் அதிகரிப்பதுடன், மாநிலத்தின் பயறு உற்பத்தித் தேவையில் தன்னிறைவு பெறலாம் என, எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பயிர் ஊக்கியை, உளுந்து மற்றும் பாசிப் பயிர்களுக்கு, "டி.ஏ.பி.,' கரைசலுக்கு மாற்றாகப் பயன்படுத்தலாம்.50 சதவீத மானியம்முதல் கட்டமாக, 1,695 கிராமங்களில், 50 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில், "பயறு அதிசயம்' தெளிக்கும் திட்டத்தை செயல்படுத்த, முடிவாகி

உள்ளது.இந்த பயிர் ஊக்கியைப் பிரபலப்படுத்தும் விதமாக, விவசாயிகளுக்கு, 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படும். இதற்காக, 212.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேளாண் கூட்டுறவு சங்கம் மூலம் விவசாயிகளுக்கு நிவாரணம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,22:41 IST

கருத்தை பதிவு செய்ய

கடலூர்:"தானே' புயலில் சேதமடைந்த விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் ஏற்பட்ட "தானே' புயல் கடந்த 30ம் தேதி கடலூரில் கரையைக் கடந்தது. அப்போது 135 கி.மீ., வேகத்தில் வீசிய காற்று மாவட்டத்தையே சின்னபின்னமாக்கியது. இதில் மாவட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த நெல், மணிலா, காய்கறிகள், பூக்கள் உள்ளிட்ட விவசாய பயிர்களும், பல ஆண்டுகள் பயன்தரக்கூடிய மா, பலா, தென்னை, கொய்யா உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்கள் பெரும் சேதத்திற்குள்ளாகின. இதனால் விவசாயிகள் வாழ்வாதாரத்தை இழந்து பரிதவித்து வருகின்றனர்.

புயலால் சேதமடைந்த பயிர்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு கணக்கெடுப்பு நடத்த உத்தரவிடப்பட்டது. இதற்காக பிற மாவட்டங்களில் இருந்து 581 வேளாண் அலுவலர்கள் வரவழைக்கப்பட்டு மாவட்டம் முழுவதும் சேதமடைந்த விவசாய பயிர்கள் குறித்து கணக்கெடுப்பு பணி நான்கு நாட்கள் நடைபெற்றது.

வேளாண் அதிகாரிகள் எடுத்த கணக்கெடுப்பை வருவாய்த் துறை பராமரிப்பில் உள்ள "சிட்டா- அடங்கல்' உடன் ஒப்பிட்டு பார்க்கும் பணி மேற்கொண்டு பயிர் சேத விவரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதில் மாவட்டத்தில் வீசிய புயலின் கோரத் தாண்டவத்தில் மூன்று லட்சத்து 16 ஆயிரத்து 580 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெல், மணிலா, உளுந்து, தென்னை, மா, பலா, முந்திரி, வாழை உள்ளிட்ட பயிர்கள் சேதமடைந்தன.இந்த பயிர்களுக்கு நிவாரணம் வழங்க முதல்வர் ஜெ., உத்தரவிட்டதைத் தொடர்ந்து, அந்தந்த பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளின் சேமிப்பு கணக்கில் செலுத்தப்பட உள்ளது.இதனால், தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் சேமிப்பு கணக்கு துவங்காத விவசாயிகள் உடனடியாக தங்கள் பகுதியில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தை அணுகி "கிஷான் கிரிடிட் கார்டு' (விவசாய கடன் அட்டை) அல்லது ரேஷன் கார்டு மற்றும் தங்களது பாஸ்போர்ட் அளவு போட்டோவை கொடுத்து "பூஜ்யம்' நிலுவை சேமிப்பு கடன் துவங்கிட வேண்டுமாறு கலெக்டர் அறிவுறுத்தியுள்ளார்.

**சுருங்கியது கொண்டை கடலை சாகுபடி பரப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,23:40 IST

பொங்கலூர் : கொண்டை கடலை மூன்று மாதப்பயிர். இது, கரிசல் மண் நிலங்களில் நன்கு வளரும் இயல்புடையது. நீண்ட காலத்துக்கு ஈரப்பதம் குறையாமல் இருப்பது கரிசல் மண்ணுக்குரிய சிறப்பம்சம். பொங்கலூர், மாதப்பூர், சுல்தான்பேட்டை உள்ளிட்ட பகுதியில் கரிசல் மண் அதிகம் காணப்படுவதால், இப்பகுதியில் மானாவாரியாக கொண்டை கடலை சாகுபடி செய்யப்படுகிறது.அதிக மழை பெய்தால் அழுகி விடும் இயல்புடையது என்பதால், மழை காலம் முடிவுறும் கார்த்திகை மாதத்தில் சாகுபடி செய்யப்பட்டு, தை மாத இறுதியில் அறுவடை செய்யப்படுகிறது. கரிசல் மண்ணிலுள்ள ஈரப்பதம், பனி மற்றும் காற்றிலுள்ள ஈரப்பதத்தை பயன்படுத்தி நன்கு வளரும் இயல்புடையது.ஒரு முறை விதைத்து விட்டால், அறுவடை வரை வேலை கிடையாது என்பதால், விவசாயிகள் ஆர்வத்துடன் கொண்டை கடலை சாகுபடியில் ஈடுபட்டு வந்தனர். நன்றாக விளைந்தால், ஏக்கருக்கு 10 குவிண்டால் வரை மகசூல் கிடைக்கும். தற்போது, விளைநிலங்களின் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளதால், கொண்டை கடலை சாகுபடி செய் வதற்கு விவசாயிகள் போதிய ஆர்வம் காட்டுவதில்லை. சாகுபடி செய்தாலும் ஆள் பிரச்னை, கட்டுப்படியான விலை கிடைக்காமை போன்ற காரணங்களால், விவசாயிகள் நஷ்டத்தை சந்திக்க வேண்டிய நிலை உள்ளது. இதனால், கொண்டைகடலை சாகுபடி செய்யும் விவசாயிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருகிறது. பெரும்பாலான விளைநிலங்கள், பெருமுதலாளிகளால் விலைக்கு வாங்கப்பட்டுள்ளது. அவர்கள், அவற்றை உபயோகப்படுத்தாமல், விலை கூடினால், விற்பனை செய்யும் எண்ணத்தில் வீணாக போட்டுள்ளனர்.

ஒரு காலத்தில், கண்ணுக்கெட்டிய தூரம் வரை கொண்டை கடலை செடிகள் பச்சை பசேல் என காட்சியளித்த காலம் மாறி, இன்று, முள் கருவேல மரங்கள், பார்த்தீனிய விஷச்செடிகள் முளைத்து தரிசு நிலங்களாக காட்சியளிக்கின்றன. ஆயிரக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட கொண்டை கடலை சாகுபடி, இன்று சில 100 ஏக்கருக்குள் சுருங்கி விட்டது. சாகுபடி பரப்பை அதிகரிக்க, வேளாண் துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**விளைச்சல் இருந்தும் கரும்பு விலை கசக்கிறது : கடந்த ஆண்டை விட அதிகம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,22:58 IST

சிவகங்கை : போதிய விளைச்சல் இருந்தும் வெளி மாவட்ட வியாபாரிகள் கரும்பை வாங்கிச் சென்றதால் கரும்பின் விலை அதிகரித்துள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் கடந்த ஆண்டு 20 ஆயிரம் எக்டேரில் கரும்பு விவசாயம் செய்யப்பட்டது. குறிப்பாக சிவகங்கை,திருப்புவனம், சிங்கம்புணரி,தேவகோட்டை பகுதிகளில் அதிக அளவில் கரும்பு பயிரிடப்பட்டது. கடந்த ஆண்டு விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள் ஆயிரம் கரும்பு ரூ.7 ஆயிரம் கொடுத்து வாங்கிச் சென்றனர். இதனால் மார்க்கெட்டில் கரும்பு கட்டின் விலை (10 கரும்பு) 150 ரூபாய் முதல் அதன் உயரத்தின் அளவிற்கு ஏற்றாற் போல் விற்பனையாளர்கள் விலை நிர்ணயம் செய்து விற்றனர்.

இந்த ஆண்டு மாவட்டத்தில் 17 ஆயிரம் எக்டேரில் குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கரும்பு பயிரிட்ட விவசாயிகள் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. விளைந்த கரும்புகளை வெளி மாநில வியாபாரிகள் கூடுதல் விலை கொடுத்து வாங்கி செல்வதால் உள்ளூர் தேவைக்கு கரும்பு கிடைப்பது அரிதான நிலை ஏற்பட்டுள்ளது.தற்போது கரும்பு ஒன்றின் விலை 25க்கு கிடைப்பதே அரிதாக உள்ளது.
சாலூர் விவசாயி ராமன் கூறியதாவது: மாவட்டத்தில் இந்த ஆண்டு கரும்பு விவசாயம் செய்ய ஆர்வம் குறைந்துவிட்டதால் பலர் பயிரிடவில்லை. ஆனாலும் கரும்பு விளைச்சல் அதிகரித்துள்ளது.வெளியூர் வியாபாரிகள் கடந்த மாதமே (கரும்பு வெட்டு முன்) அட்வான்ஸ் கொடுத்து விட்டனர். இதனால் உள்ளூர் வியாபாரிகளுக்கு தேவையான அளவு கொடுக்க முடியவில்லை.மேலும் வெளியூர் வியாபாரிகள் கரும்புக்கு கூடுதல் விலை கொடுப்பதால் வெளியூருக்கு அனுப்பவே ஆர்வம் ஏற்பட்டுள்ளது.என்றார்.

**வாடிய நெற்பயிர்கள் : விவசாயிகள் வாட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,22:24 IST

கருத்தை பதிவு செய்ய

முதுகுளத்தூர் : முதுகுளத்தூரில் பருவமழை பொய்த்ததால் கருகிய பயிர்களை கண்டு செய்வதறியாது விவசாயிகள் மனம் உருகி தவிக்கின்றனர்.

முதுகுளத்தூர், கடலாடி, கமுதி பகுதிகளில் இந்தாண்டு பருவமழை சீராக பெய்யவில்லை. மழையை எதிர்பார்த்து நெற்பயிர்கள் மகசூலின்றி கருகி காற்றாடுகின்றன. முதுகுளத்தூர், கடலாடி, கமுதி ஆகிய மூன்று தாலுகாக்களில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் நெல், மிளகாய் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் செய்வதறியாது மனம் வெதும்பி உள்ளனர். முதுகுளத்தூர் தாலுகா விவசாய சங்க தலைவர் சண்முகவேலு கூறியதாவது: பருவமழை பொய்ப்பால் நீர்நிலைகள் வறண்டு கிடக்கின்றன. வரும் கோடையில் குடிநீர் தட்டுபாடு ஏற்படும் அபாயம்

உள்ளது.
பாதிக்கப்பட்ட விவசாயத்திற்கு பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில் விவசாயிகள் பயன்பெறும் கால அளவை நீட்டிக்க வேண்டும். முதுகுளத்தூர், கடலாடி, கமுதி பகுதி விவசாயிகள் வாழ்வாதாரம் பெருக, பிரதான ஆற்றுநீர் பாசன வசதியை ஏற்படுத்த வேண்டும், என்றார்.

**பட்டுப்புழு வளர்ப்பில் குறைந்த முதலீடு; அதிக லாபம் :விவசாயிகளுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,23:22 IST

கருத்தை பதிவு செய்ய
கோவை : குறைந்த முதலீட்டில், அதிக லாபத்தை தரும், பட்டுப் புழு வளர்ப்பில் ஈடுபட, பட்டு வளர்ச்சித் துறை, விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.
இந்தியாவில் பட்டு நூல் உற்பத்தியில், கர்நாடகா முதலிடம், ஆந்திரா இரண்டாமிடம், தமிழ்நாடு மூன்றாம் இடத்திலும் உள்ளன. இதில், வெண்பட்டு புழு உற்பத்தியில், தமிழ்நாடு முதலிடத்தை தக்க வைத்துள்ளது. இதுமட்டுமில்லாமல், மொத்த பட்டு உற்பத்தியில், தமிழகத்தை முதலிடத்தில் கொண்டு வர, அரசு தீவிரம் காட்டி
வருகிறது.
விவசாயிகளிடையே பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் புழுவின் உணவு ஆதாரமான மல்பரி சாகுபடி உள்ளிட்டவை குறித்து பயிற்சி வகுப்புகள், நலத்திட்ட உதவிகளையும் தமிழக அரசு அறிவித்து,செயல்படுத்தி வருகிறது.
இதில், 2.50 ஏக்கர் வரையில், மல்பரி நடவு செய்பவர்களுக்கு ஊக்கத்தொகையாக, ஏக்கருக்கு 4,125 ரூபாய்; ஒருமனை மற்றும் ஒரு ஏக்கர் மல்பரி சாகுபடியாளர்களுக்கு, தனி புழுவளர்ப்பு மனை அமைக்க, 1500 சதுர அடிக்கு 75,000 ரூபாய்; 1000 அடிக்கு 50,000 ரூபாய்; அரை ஏக்கர் எனில் 700 அடிக்கு 25,000 ரூபாய் என, அரசு மானியம் வழங்குகிறது.
மேலும், 1,200 சதுர அடிப்பரப்பில், தண்டு அறுவட தாங்கியை, 10,000 ரூபாய் மதிப்பில் நிறுவியிருந்தால், புழு வளர்ப்பு தளவாடங்கள் கொள்முதல் செய்திட 30,000 ரூபாய்; 2.50 ஏக்கர் வரையில், சொட்டு நீர் பாசனம் அமைத்திட 15,000 ரூபாய் முதல் 25,000 ரூபாய் வரை, மானியம் அளிக்கிறது.
ஆண்டுக்கு 750 முட்டை தொகுதி, வெண்பட்டு புழு வளர்ப்புக்கு கிருமி நாசினிகள் தெளிக்க 1,500 ரூபாய்; பலமுனை பட்டு நூற்பு இயந்திரம் ஒன்றுக்கு ஏழு லட்சத்து 50 ஆயிரம்; தானியங்கி பட்டு நூற்பு இயந்திரம் ஒன்றுக்கு 65,000 ரூபாய்; வெப்ப உலர்த்தி ஒன்றுக்கு, ஒரு லட்சத்து முப்பத்து ஒன்றாயிரம்; பட்டு முருக்கேற்றும் இயந்திரம் ஒன்றுக்கு, நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் போன்ற, மானியங்களை அரசு வழங்கி வருகிறது.

இதுமட்டுமின்றி, ஓசூரில் உள்ள பட்டு பயிற்சிப் பள்ளியில், விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது; இதற்காக அரசு, ஒரு விவசாயிக்கு ஐந்தாயிரம் ரூபாய் செலவிடுகிறது. பட்டு வளர்ப்பில் ஈடுபடும் பெண்களுக்கு, மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து, 10,000 ரூபாய் முதல் 20,000 ரூபாய் வரை நிதியுதவி அளிக்கிறது.

மலைவாழ் பகுதி மக்களின் வாழ்க்கையை, பட்டு வளர்ப்பு மூலம் மேம்படுத்திட, திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இதில், மல்பரி நாற்று (ஏக்கர்) 1,250 ரூபாய்; பயிற்சி செலவினம் (ஒரு நபர்) 2,500 ரூபாய்; தளவாடங்கள் 10,000 ரூபாய் அளிக்கப்படுகின்றன.

மேலும், 100 மூட்டை தொகுதி புழு வளர்ப்புக்கு இழப்பீடு தொகையும் அளிக்கப்படுகிறது. இதில், புழுவளர்ப்பில் இருசுழற்சியினம்- 5,787 ரூபாய்; கலப்பினம் 4,700 ரூபாய் என, வழங்கப்படுகிறது. புழு வளர்ப்பு மனை மற்றும் தனிநபர் விபத்து காப்பீட்டு திட்டத்தில், 50,000 ரூபாய் இழப்பீடு தொகை வழங்கப்படுகிறது.

பட்டு வளர்ப்பு தொழிலில், ஒரு சிலர் மட்டுமே ஈடுபட முடியும் எனும் நிலைமாறி, அனைத்து பகுதிகளிலும், எல்லா மக்களும் செய்யும் சிறந்த கைத்தொழிலாக மாறி வருகிறது. அரசு அளிக்கும் மானியங்களை முறையாக பயன்படுத்தினால், இந்தியாவில் பட்டு நூல் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடத்தை பெற முடியும்.

கோவை மாவட்ட பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் வைத்தியநான் கூறியதாவது:

கோவை மாவட்டத்தில் அன்னூர், பெரிய நாயக்கன்பாளையம், கோவை ஆகிய இடங்களில், 500 ஏக்கருக்கு மேல் மல்பரி சாகுபடி உள்ளது; 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஈடுபடுகின்றனர்.

கோவை பட்டு வளர்ச்சி நிலைத்தில், மாதம் 15,000 கிலோ பட்டுக் கூடு உற்பத்தியாகிறது.

வெண்பட்டுக் கூடு கிலோ 200 முதல் 255 ரூபாய் வரையில், விலை உள்ளது. வருங்காலத்தில் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. விவசாயிகள் குறுகிய நாட்களில் லாபம் சம்பாதிக்க முடியும்.

பட்டு நூல் உற்பத்தியில் சீனா முதலிடத்தில் உள்ளது. அந்த நாட்டின் பட்டு நூலை விட, உயர் தரத்தில் உற்பத்தியை, தமிழ்நாட்டில் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, என்றார்.

**வேளாண் விஞ்ஞானிக்கு புல்பிரைட் விருது**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2012,23:22 IST

கோவை : அமெரிக்க-இந்திய கல்வி அறக்கட்டளை சார்பில் வழங்கப்படும், புல்பிரைட்- நேரு கல்வி ஊக்கத்தொகை விருது, தமிழ்நாடு வேளாண் பல்கலை, உயிர் தொழில்நுட்பவியல் பேராசிரியர் சந்திரபாபுக்கு கிடைத்துள்ளது.

பயிர்களின் மகசூல் மற்றும் உற்பத்தி திறனை பாதிக்கும் முக்கிய காரணியாக, வறட்சி உள்ளது.

முக்கிய உணவு தானியங்களான நெல் மற்றும் கோதுமையில்,வறட்சியை தாங்கி வளரக்கூடிய ரகங்களை உருவாக்குவது மிகவும் அவசியம்.
வறட்சியை தாங்கும் திறனுக்கான மூலக்கூறு குறியீடுகள் மூலம், மேம்படுத்தப்பட்ட ரகங்களை உருவாக்குவதற்கு, சந்திரபாபுவின் ஆய்வு பயன்
படும். இதில், இருநாடுகளின் கூட்டு ஆராய்ச்சியால், நெல் மற்றும் கோதுமையில், வறட்சியை தாங்கி வளர்வதற்கான இனப்பெருக்க இலக்குகளை அடையாளம் காண முடியும்.
பயிர்களில் வறட்சியை தாங்கி வளரும் திறனை மேம்படுத்தும் ஆராய்ச்சிக்காக,பேராசிரியர் சந்திரபாபு தேர்வு செய்யப்பட்டுள்ளார். அமெரிக்க கார்னல் பல்கலையில், எட்டு மாதம் தங்கியிருந்து, ஆராய்ச்சியை மேற்கொள்ள இருக்கிறார். இவர், வேளாண் பல்கலையில் மூதறிவியல் கல்வியின் முதன்மையராக பணிபுரிந்தது குறிப்பிடத்தக்கது.

---

தினகரன்

**பொங்கலையொட்டி கோழி விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : 1/12/2012 12:54:18 AM



அந்தியூர் : பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அத்தாணி சந்தையில் நாட்டுக்கோழி, சேவல்களின் விலை அதிகரித்தது. ஈரோடு மாவட்டம், கோபியை அடுத்துள்ள அத்தாணி மார்க்கெட் திடலில் வாரந்தோறும் செவ்வாயன்று நாட்டுக்கோழி சந்தை கூடும். பொங்கலை முன்னிட்டு நேற்று முன் தினம் நடந்த சந்தைக்கு 800க்கும் மேற்பட்ட நாட்டுக்கோழி, சேவல்கள் விற்பனைக்கு வந்தன. வழக்கமாக, 500க்குள்தான் வரும். இறைச்சிக் கோழிகள் எடையை

பொறுத்து கடந்த வாரத்தை விட ஸி40 அதிகரித்து ஸி240க்கும், சேவல்கள் ஸி200 அதிகரித்து அதிகபட்சமாக ரூ.1500 வரை விற்கப்பட்டது.

---

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## கரும்பு வெட்டும் பணி



தமிழர் திருநாளாம் பொங்கல் வந்து விட்டால் மஞ்சள் மணக்கும், கரும்பு இனிக்கும். இதையொட்டி ஈரோடு சமய சங்கிலி என்ற இடத்தில் கரும்புகள் வெட்டப்பட்டு வெளியூர்களுக்கு கொண்டு செல்ல கட்டு கட்டாக வைக்கப்பட்டு இருக்கும் காட்சி.

## *தானே புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மரக்கன்று, உரங்கள், பராமரிப்பு செலவு ஓராண்டுக்கு இலவசம் ஜெயலலிதா அறிவிப்பு*

*சென்னை, ஜன.12–*

*'தானே' புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மரக்கன்று, உரங்கள், பராமரிப்பு செலவுகளை ஓராண்டுக்கு அரசே ஏற்றுக்கொள்ளும் என்று முதல்–அமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார்.*

*இதுகுறித்து முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–*

*'தானே' புயலால் சேதம்*

*கடந்த டிசம்பர் மாதம் 30–ந் தேதி புதுச்சேரிக்கும், கடலூருக்கும் இடையே கரையைக் கடந்த "தானே" புயல் தமிழகத்தை தாக்கி, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் மிகப்பெரும் சேதத்தை ஏற்படுத்திச் சென்றுவிட்டது.*

*இந்த புயலின் கோரத் தாக்குதல் காரணமாக, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களின் அடிப்படை கட்டமைப்புகள் முற்றிலும் சீரழிந்துவிட்டன. குடிநீர் வசதி, சாலை வசதி மற்றும் மின்சார வசதி ஆகியவை மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டன. சுமார் 4 லட்சம் குடிசை மற்றும் ஓடு வேய்ந்த வீடுகள் சேதமடைந்துள்ளன.*

*சீரமைப்புப் பணிகள்*

*இதனையடுத்து, அரசு எந்திரம் முடுக்கிவிடப்பட்டு, சீரமைப்பு பணிகள் போர்க்கால அடிப்படையில், முழுவீச்சில் நடைபெற்று வருவதால், மக்களுக்கு தேவையான குடிநீர் எவ்வித இடையூறும் இன்றி வழங்கப்பட்டு வருகிறது.*

*கடலூர் மாவட்டம் முழுவதும் புதிதாக மின்னமைப்பு ஏற்படுத்துவதுபோல உள்ள சவாலான பணியை மின்சார வாரியம் செம்மையாக செய்து வருகிறது. மின்சார வசதியை சீரமைக்கும் பணியில் 3 ஆயிரம் பணியாளர்கள் அல்லும்பகலும் அயராது பணிபுரிந்து வருகின்றனர். மேலும் 5 ஆயிரம் பணியாளர்கள் மின்சார சீரமைப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். மின்சார கட்டமைப்புக்கு ஏற்பட்ட இதுபோன்ற பேரழிவை சீர்செய்ய குறைந்தது 6 மாத காலம் ஆகும் என்ற போதிலும், எனது தலைமையிலான அரசின் இடைவிடாத முயற்சியினால், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் பொங்கல் திருநாளுக்குள் மின் வசதி வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

*நிவாரண உதவித்தொகை*

*"தானே" புயல் காரணமாக தமிழ்நாட்டில் சுமார் 1.76 லட்சம் ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்ட வேளாண் பயிர்களும், 0.48 லட்சம் ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்ட தோட்டக்கலை பயிர்களும், ஆக மொத்தம் 2.24 லட்சம் ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்ட பயிர்கள் முற்றிலும் சேதமடைந்துள்ளன. இதன் விளைவாக, விவசாய பெருங்குடி மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, அவர்களது பொருளாதார நிலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு பயிர் சேதங்களுக்கு மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறையில் குறிப்பிட்டுள்ளதை விட, அதிகமான நிவாரணத் தொகை வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். பயிர் இழப்புகளுக்காக மட்டும் ரூ.210 கோடி அளவுக்கு நிவாரண உதவித்தொகை வழங்கப்படும்.*

*ஓராண்டுக்கு அரசு ஏற்றுக்கொள்ளும்*

*இவ்வாறு பயிர் சேதங்களுக்காக நிவாரண உதவி தொகைகள் வழங்கப்பட்டாலும், பலா, முந்திரி போன்ற தோட்டப்பயிர்களின் மூலம் வருவாய் ஈட்டி வந்த விவசாயப் பெருங்குடி மக்களின் துயர் துடைத்திட இயலாது. எனவே, புயல் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு நிவாரண தொகுப்பு உதவி வழங்க முடிவு செய்துள்ளேன்.*

*இதன்படி, புயலால் முற்றிலும் சேதமடைந்த பலா, முந்திரி மற்றும் தென்னை ஆகிய*

தோட்டக்கலைப் பயிர்களை மீண்டும் பயிர் செய்வதற்கு விலை ஏதுமின்றி மரக்கன்றுகள் வழங்கப்படும்.

இவற்றை பராமரிப்பதற்கு தேவையான பராமரிப்புச் செலவுகள் மற்றும் விவசாயப் பணிகளுக்கான செலவுகள் அரசால் ஓராண்டு காலத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

விவசாய வேலையாட்களுக்கான செலவுகள் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் மூலம் வழங்கப்படும். தங்கள் சொந்த நிலங்களில் நில மேம்பாடு, குழி எடுத்தல் போன்ற விவசாயப் பணிகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கும் இந்த திட்டத்தின்படி ஊதியம் வழங்கப்படும்.

$3^{1}/_{2}$ லட்சம் விவசாயிகள்

இந்த விவசாயிகள், உளுந்து, பாசிப் பயிறு, சிறு தானியங்கள் மற்றும் வேர்க்கடலை போன்ற ஊடு பயிர்கள் சாகுபடி செய்து வருமானம் ஈட்டும் வகையில், இவற்றை பயிரிடுவதற்கான சான்று விதைகள், உயிர் உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஆகியவை அடங்கிய சிறு தளை விலை ஏதுமின்றி ஓராண்டு காலத்திற்கு வழங்கப்படும்.

நெல், பயிறு வகைகள், எண்ணெய் வித்துகள் போன்ற பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு, சான்று விதைகள், உயிர் உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஆகியவை அடங்கிய சிறு தளை ஒன்று விலை ஏதுமின்றி வழங்கப்படும்.

இந்த உதவித் தொகுப்பின் மூலம் சுமார் 3 லட்சத்து 45 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறுவர். இதன் மூலம் அவர்கள் புயலால் இழந்த வாழ்வாதாரத்தை திரும்பப்பெற இயலும்.

இவ்வாறு முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிக்கையில் கூறியுள்ளார்.

## நறுமண பொருள்கள் ஏற்றுமதி 5% சரிவு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,மும்பை

நடப்பு நிதி ஆண்டில் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான எட்டு மாதங்களில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 5.4 சதவீதம் குறைந்து 3.52 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது. இது,

*சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் 3.72 லட்சம் டன்னாக இருந்தது. மிளகாய், தனியா மற்றும் பூண்டு ஏற்றுமதியில் ஏற்பட்டே சரிவே இதற்கு காரணம் என நறுமணப் பொருள்கள் வாரியம் தெரிவித்துள்ளது.*

*பூண்டு, மிளகாய்*

*முதல் எட்டு மாதங்களில் பூண்டு ஏற்றுமதி 94 சதவீதம் சரிந்து 1,075 டன்னாக குறைந்துள்ளது. மிளகாய் ஏற்றுமதி 24 சதவீதம் குறைந்து 1.33 லட்சம் டன்னாக சரிந்துள்ளது. அதே சமயம் மிளகு, மஞ்சள், சீரகம் மற்றும் ஏலக்காய் ஏற்றுமதி கணிசமாக உயர்ந்துள்ளது.*

*மஞ்சள் ஏற்றுமதி 63 சதவீதம் உயர்ந்து 58,000 டன்னாகவும், மிளகு ஏற்றுமதி 43 சதவீதம் வளர்ச்சி கண்டு 17,000 டன்னாகவும், சீரகம் ஏற்றுமதி 28 சதவீதம் அதிகரித்து 26,500 டன்னாகவும் உயர்ந்துள்ளது.*

*இது குறித்து ஏஞ்சல் கமாடிட்டீஸ் நிறுவனத்தின் ஆய்வாளர் நளினி ராவ் கூறுகையில், “அக்டோபர், நவம்பர் ஆகிய மாதங்களில் சீரகம் மற்றும் மிளகு ஏற்றுமதி விறுவிறுப்பாக இருந்தது. இந்தியாவிலிருந்து சர்வதேச சந்தைக்கு சப்ளை அதிகரித்ததும், போட்டி அடிப்படையில் விலை குறைவாக இருந்ததுமே இதற்கு முக்கிய காரணங்களாகும். இனி வரும் மாதங்களில் அனைத்து வகை நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி முன்னேற்றம் அடையும்” என்று தெரிவித்தார்.*

*ஐந்து லட்சம் டன்*

*நடப்பு நிதி ஆண்டில் 5 லட்சம் டன் நறுமணப் பொருள்களை ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நவம்பர் வரையிலான எட்டு மாதங்களில் இந்த இலக்கில் 70 சதவீதம் எட்டுப்பட்டுள்ளது. எனவே ஏற்றுமதியில் ஏற்பட்ட சரிவு குறித்து அதிருப்தி அடைய வேண்டியதில்லை என்றும், நிர்ணயித்த இலக்கை எளிதாக எட்டி விட முடியும் என பல்வேறு தரப்பினரும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.*